No. of Printed Pages : **11**

**5952**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III

# வணிகவியல் / COMMERCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I/PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை _________ என்பர்.

(அ) வேலைப்பகிர்வு (ஆ) ஒழுங்கு

(இ) சமத்துவம் (ஈ) ஒற்றுமை

Dividing the work into small tasks is known as :

(a) Division of work (b) Discipline

(c) Equity (d) Unity

2. பங்கு மாற்றகமானது _________.

(அ) முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு

(ஆ) ஊக வணிகத்திற்கான வசதியைத் தருகிறது

(இ) உடனடி சந்தை

(ஈ) மேற்சொன்ன அனைத்தும்

Stock Exchanges are _________.

(a) Protection to Investors

(b) Facilities for speculation

(c) Ready Market

(d) All of the above

3. மனிதவள மேலாண்மை என்பது _________ ஆகும்.

(அ) கோட்பாடு மற்றும் நடைமுறை (ஆ) வரலாறு மற்றும் புவியியல்

(இ) அறிவியல் மற்றும் கலை (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

Human Resource Management is both _________.

(a) Theory and Practice (b) History and Geography

(c) Science and Art (d) None of the above

4. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு :

(அ) 1930 (ஆ) 1940 (இ) 1960 (ஈ) 1997

Sale of Goods Act was passed in the year :

(a) 1930 (b) 1940 (c) 1960 (d) 1997



https://www.tamilnaduboard.com

5. நாட்டில் _________ பங்கு சந்தைகள் உள்ளன.

(அ) 20 (ஆ) 21 (இ) 25 (ஈ) 24

There are _________ stock exchanges in the country.

(a) 20 (b) 21 (c) 25 (d) 24

6. கீழ்க்கண்டவற்றுள் எது பங்குகள் மற்றும் பத்திரங்களை வாங்கி, விற்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது ?

(அ) உள்ளூர் சந்தை (ஆ) பங்கு சந்தை

(இ) குடும்ப சந்தை (ஈ) தயாரிப்பு பொருள் சந்தை

Which one of the market deals in the purchase and sale of shares and debentures ?

(a) Local market (b) Stock exchange market

(c) Family market (d) Manufactured goods market

7. அரசுப் பத்திரங்கள் _________ போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.

(அ) மாநில அரசுகள்

(ஆ) பகுதி அரசு அமைப்புகள்

(இ) மத்திய அரசு

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

Government securities are issued by agencies such as _________.

(a) State Governments

(b) Semi-Government authorities

(c) Central Government

(d) All of the above

8. _________ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும்.

(அ) சிறப்பு (ஆ) சட்டமுறை

(இ) வகுப்பு (ஈ) ஆண்டு பொது

Which meeting will be held once in the lifetime of the company ?

(a) Extra-ordinary (b) Statutory

(c) Class General (d) Annual General



https://www.tamilnaduboard.com

9. மாற்றுமுறையாவணமானது _________.

(அ) மாற்றித்தரும் தன்மை கொண்டது

(ஆ) அதன் உரிமையாளரின் உரிமை பழுதற்றது

(இ) (அ) மற்றும் (ஆ) சரியானது

(ஈ) (அ) மற்றும் (ஆ) தவறானது

Negotiable Instrument is :

(a) Transferable

(b) Title of the holder is free from all defects

(c) (a) and (b) are correct

(d) (a) and (b) are wrong

10. தொழில் முனைவோரை கீழ்குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது ?

(அ) ஊழியர் (ஆ) இடர் தாங்கி

(இ) அமைப்பாளர் (ஈ) புதுமைபடைப்பாளர்

Entrepreneur is not classified as :

(a) Employee (b) Risk Bearer

(c) Organizer (d) Innovator

11. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் _________.

(அ) நுகர்வோர் திருப்தி (ஆ) அதிகமான இலாபம்

(இ) சமுதாயத்திற்கு சேவை (ஈ) குறைவான இலாபம்

The final aim of modern marketing is _________.

(a) Consumer satisfaction (b) Maximum profit

(c) Service to the society (d) Minimum profit



https://www.tamilnaduboard.com

**12.** மூலதனச் சந்தை என்பது _________ க்கான ஒரு சந்தை ஆகும்.

(அ) நீண்ட கால நிதி

(ஆ) குறுகிய கால நிதி

(இ) குறுகிய மற்றும் நடுத்தர கால நிதி

(ஈ) நடுத்தர கால நிதி

Capital market is a market for :

(a) Long-term finance

(b) Short-term finance

(c) Both short-term and medium term finance

(d) Medium term finance

**13.** விளம்பரம் என்பது ஒரு _________ ஆட்சேர்ப்பு வளமாகும்.

(அ) முகவர் (ஆ) அக வளங்கள்

(இ) புறத்திறனீட்டல் (ஈ) புற வளங்கள்

Advertisement is a _________ source of recruitment.

(a) agent (b) internal

(c) outsourcing (d) external

**14.** ஒரு தனியார் நிறுமத்தில் குறைந்தது _________ இயக்குநர்கள் இருக்க வேண்டும்.

(அ) மூன்று (ஆ) ஏழு (இ) இரண்டு (ஈ) ஐந்து

A private company shall have a minimum of _________ Directors.

(a) 3 (b) 7 (c) 2 (d) 5

**15.** சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார் ?

(அ) மொத்த விற்பனையாளர் (ஆ) வாடிக்கையாளர்

(இ) சில்லறை விற்பனையாளர் (ஈ) விற்பனையாளர்

Who is supreme in the market ?

(a) Wholesaler (b) Customer

(c) Retailer (d) Seller



https://www.tamilnaduboard.com

**16.** மேலாண்மை என்பது _________ ன் செயல் ஆகும்.

(அ) மேற்பார்வையாளர் (ஆ) மேலாளர்

(இ) உயரதிகாரி (ஈ) கீழ்பணியாளர்

Management is what a _________ does.

(a) Supervisor (b) Manager

(c) Superior (d) Subordinate

**17.** பின்வருவனவற்றுள் எது மேலாண்மையின் முக்கிய பணி அல்ல ?

(அ) ஒழுங்கமைத்தல் (ஆ) முடிவெடுத்தல்

(இ) பணியமர்த்தல் (ஈ) திட்டமிடுதல்

Which of the following is not a main function of management ?

(a) Organising (b) Decision-making

(c) Staffing (d) Planning

**18.** பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை _________ என அழைக்கப்படுகிறது.

(அ) நேர்காணல் (ஆ) தேர்வு

(இ) தூண்டுதல் (ஈ) ஆட்சேர்ப்பு

The process of eliminating unsuitable candidates is called _________.

(a) Interview (b) Selection

(c) Induction (d) Recruitment

**19.** _________ புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.

(அ) தனியார்மயமாக்கல் (ஆ) தாராளமயமாக்கல்

(இ) உலகமயமாக்கல் (ஈ) இவற்றில் எதுவும் இல்லை

_________ is the result of New Industrial Policy which abolished the 'License System'.

(a) Privatisation (b) Liberalisation

(c) Globalisation (d) None of these



https://www.tamilnaduboard.com

**20.** 'நுகர்வோரியல்' எனும் சொல் தோன்றிய ஆண்டு :

(அ) 1954 (ஆ) 1960 (இ) 1958 (ஈ) 1957

The term 'Consumerism' came into existence in the year _________.

(a) 1954 (b) 1960 (c) 1958 (d) 1957

## பகுதி - II / PART - II

குறிப்பு : **ஏதேனும் 7** வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் **30- வது** வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். **7x2=14**

**Note :** Answer **any 7** questions. Question No. **30** is **compulsory**.

**21.** மேலாண்மை என்றால் என்ன ?

What is management ?

**22.** பங்குச் சந்தை என்றால் என்ன ?

What is stock exchange ?

**23.** மனித வள மேலாண்மையின் இயல்புகளில் ஏதேனும் இரண்டினை விளக்குக.

Explain any two features of Human Resource Management.

**24.** களச் சந்தை மற்றும் எதிர்கால சந்தை என்றால் என்ன ?

What is meant by Spot Market and Future Market ?

**25.** கலப்படத்திற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

Give four examples of adulteration.

**26.** தனியார்மயமாக்கல் என்றால் என்ன ?

What is privatisation ?

**27.** நிகழ் சரக்கு என்றால் என்ன ?

What is a contingent goods ?



https://www.tamilnaduboard.com

**28.** மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் ஏதேனும் இரண்டு சிக்கல்களை எழுதுக.

List any two challenges faced by the women entrepreneurs.

**29.** டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.

Give a note on 'Digital India'.

**30.** ஒரு நிறுமத்தில் முக்கிய நிர்வாக நபர்களை பட்டியலிடுக.

List out the Key Managerial Personnel in a Company.

**பகுதி - III / PART - III**

குறிப்பு : **ஏதேனும் 7** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40-க்கு கட்டாயம்** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் 3).

Differentiate management from administration (any 3).

**32.** கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை ?

What are the features of Treasury Bills ?

**33.** மான் ஊக வணிகரை விளக்குக.

Explain stag type of speculator.

**34.** வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன ?

What is meant by job portals ?

**35.** சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை ? (ஏதேனும் 3)

Write any three objectives of marketing.



https://www.tamilnaduboard.com

**36.** நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிவது யாது ?

What do you understand by "Right to Redressal" ?

**37.** புதிய பொருளாதார கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.

Write a short note on New Economic Policy.

**38.** தற்போதைய / இருக்கின்ற சரக்கு என்றால் என்ன ?

What is meant by existing goods ?

**39.** ஸ்டார்ட்டப் இந்தியா என்றால் என்ன ?

What is 'Startup India' ?

**40.** "இந்தியா டெக் பொது நிறுமம் நேர்மை பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டது. சில ஆண்டுகளுக்கு பிறகு அந்நிறுமம் கலைப்பிற்கு உள்ளானது. நிறும கலைப்பின் போது எவ்வகை பங்குநர் தங்கள் பங்கு முதலை முதலில் திரும்பப் பெறுவர் ? விளக்குக.

India Tech public company issued equity shares and preference shares. After some years the company went into liquidation. Which type of shareholder will get their share capital first ? Explain.

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) மேலாண்மையின் முதன்மைப் பணிகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

**அல்லது**

(ஆ) இந்திய பொருளாதாரத்தில் எல்.பி.ஜி. (LPG) -யின் தாக்கத்தை விளக்குக.

(a) Explain any five main functions of management.

**OR**

(b) Explain the impact of LPG on Indian Economy.



https://www.tamilnaduboard.com

**42.** (அ) பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளில் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக.

(a) Differentiate between money market and capital market (any 5).

**OR**

(b) Distinguish between conditions and warranty.

**43.** (அ) பங்கு சந்தை பணிகளில் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) கடன் பத்திரங்களின் வகைகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

(a) Explain any five functions of Stock Exchange.

**OR**

(b) Explain any five kinds of Debentures.

**44.** (அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள புற வளங்கள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

**அல்லது**

(ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

(a) Explain any five external sources of Recruitment.

**OR**

(b) Mention any five responsibilities of consumers.

**45.** (அ) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின் சந்தையிலிருந்து வேறுபடுகிறது என்பதை விளக்குக.

**அல்லது**

(ஆ) தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

(a) Explain how traditional marketing differ from E-marketing.

**OR**

(b) Explain any five characteristics of an entrepreneur.

**A**

https://www.tamilnaduboard.com

**46.** (அ) ''நுகர்வோர் பாதுகாப்பில்'' வணிகத்தின் பங்குகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

**அல்லது**

(ஆ) எவையேனும் ஐந்து வகையான நிதிச்சந்தைகளை விவரிக்கவும்.

(a) Explain any five roles of business in consumer protection.

**OR**

(b) Enumerate any five different kinds of Financial Market.

**47.** (அ) மின்னணு சந்தையிடுதலின் நன்மை தீமைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

(a) Explain the advantages and disadvantages of E-Marketing.

**OR**

(b) Explain any five principles of modern management.

-o0o-

A

https://www.tamilnaduboard.com